# அங்கீகாரம் பெறாத நர்சிங் கல்லூரிகளில் படித்து ஏமாற வேண்டாம்

## மாணவ-மாணவிகளுக்கு நர்சிங் கவுன்சில் எச்சரிக்கை

சென்னை, ஆக.17-

அங்கீகாரம் பெறாத நர்சிங் கல்லூரிகளில் படித்து ஏமாறவேண்டாம் என்று தமிழ்நாடு நர்சிங் கவுன்சில் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தமிழ்நாடு நர்சிங் கவுன்சில் பதிவாளர் எஸ்.ஆனி கிரேஸ் கலைமணி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

### அங்கீகாரம் கொண்ட படிப்புகள்

தமிழ்நாட்டில் நர்சிங் கல்லூரிகளுக்கு அங்கீகாரம் அளிப்பது தமிழ்நாடு நர்சிங் கவுன்சில். அத்தகைய கவுன்சில் அங்கீகாரம் பெற்ற நர்சிங் கல்லூரிகளின் நிறுவனங்களில் படிப்பதே முறையான கல்விக்கு வழி வகுக்கும். அதனால் நர்சிங் படிப்பு படிக்க விரும்பும் மாணவ-மாணவிகள் அங்கீகாரம் பெற்ற கல்லூரிகளில் மட்டுமே படிக்கவேண்டும்.

இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்ட நர்சிங் படிப்புகளாக 1.டிப்ளமோ இன் நர்சிங் (3½ வருடம்) 2.பி.எஸ்சி.நர்சிங் (4 வருடங்கள்) 3.டிப்ளமோ இன் ஆக்ஸிலரி நர்ஸ் மிட் வைப் மற்றும் மல்டி பர்பஸ் ஹெல்த் ஒர்க்கர் (2 வருடம்)

என 3 படிப்புகள் மட்டுமே பிளஸ்-2 முடித்தவுடன் படிக்கக்கூடிய நர்சிங் படிப்புகளாகும். இந்த 3 படிப்புகள் மட்டுமே நர்சிங் கவுன்சிலால் பதிவு பெறத்தகுதியான படிப்புகளாகும். நர்சிங் கவுன்சிலில் பதிவு பெற்றால் இந்தியாவில் மட்டுமல்ல உலகம் முழுவதும் நர்சாக வேலை பார்க்கலாம்.

ஆனால் பலர் நர்சிங் என்ற பெயரில் போலியான படிப்புகளை படித்துவிட்டு பல மாணவ-மாணவிகள் இங்கு வருகிறார்கள். அந்த படிப்புகளை பதிவு செய்ய முடியாது என அறியும் போது மிகவும் மனமுடைந்து போகிறார்கள்.

ஏனென்றால் அவர்கள் படித்த காலமும், நேரமும் விரயம் தான். எனவே இதை தடுக்கும் பொருட்டு சமூக நலன் கருதி இந்த அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் படித்தால் மட்டுமே நர்சிங் படிப்பு பதிவு செய்ய இயலும் என்று அறிவுறுத்தப்படுகிறது.

பல்வேறு தலைப்புகளில் அங்கீகாரம் மற்றும் பதிவு பெற முடியாத படிப்புகளை பல நிறுவனங்கள் நர்சிங் என்ற பெயரில் நடத்தி, ஒன்றும் அறியாத அப்பாவி மாணவ-மாணவிகளை ஏமாற்றி வருகின்றன. அங்கீகாரம் பெறாத படிப்புகள் விவரம் வருமாறு:-

### அங்கீகாரம் இல்லா படிப்புகள்

★ டிப்ளமோ இன் நர்சிங் அசிஸ்டெண்ட் கோர்ஸ் (6 மாதம் / 2 வருடங்கள்)

★ டிப்ளமோ இன் நர்சிங் (2 வருடம்)

★ டிப்ளமோ இன் பர்ஸ்ட் எய்டு நர்சிங் (2 வருடம்)

★ வில்லேஜ் ஹெல்த் நர்சிங் (2 வருடம்)

★ டிப்ளமோ இன் நர்சிங் எய்டு (2 வருடம்)

★ டிப்ளமோ இன் பர்ஸ்ட் எய்டு மற்றும் பிராக்டிக்கல் நர்சிங்

★ டிப்ளமோ பிராக்டிக்கல் நர்சிங் (1வருடம்/ 2 வருடம்)

★ சர்டிபிகேட் இன் நர்சிங் (1 வருடம்)

★ அட்வான்ஸ்டு டிப்ளமோ இன் நர்சிங் அசிஸ்டெண்ட் (2 வருடம்)

★ டிப்ளமோ இன் ஹெல்த் அசிஸ்டெண்ஸ் (1 வருடம்)

★ நர்ஸ் டெக்னீசியன் கோர்ஸ்

★ ஹெல்த் கைடு கோர்ஸ்

நர்சிங் படிக்க விரும்பும் மாணவ-மாணவிகள் தமிழ்நாடு அரசு அங்கீகாரம் பெற்ற தமிழ்நாடு நர்சிங் கவுன்சிலில் பதிவு பெற்ற தகுதியுடைய செவிலியர் பள்ளிகளில், கல்லூரிகளில் சேருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அங்கீகாரம் பெறாத பள்ளிகளில் கல்லூரிகளில் படித்து ஏமாறவேண்டாம்.

அங்கீகாரம் பெற்ற பள்ளிகள் மற்றும் கல்லூரிகளை தமிழ்நாடு நர்சிங் கவுன்சில் இணையதளத்தில் (www.tamilnadunursingcouncil.com) சென்று தெரிந்து கொள்ளலாம்.

இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அங்கீகாரம் பெற்ற கல்லூரிகள்

நர்சிங் படிக்க அங்கீகாரம் பெற்ற கல்லூரிகளாக தமிழ்நாட்டில் சென்னை மருத்துவ கல்லூரி, அரசு ஸ்டான்லி மருத்துவக்கல்லூரி, தஞ்சை மருத்துவக்கல்லூரி, திருச்சி அண்ணல் காந்தி நினைவு மருத்துவமனை, சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி, திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி, கோவை மருத்துவக்கல்லூரி, மதுரை அரசு ராஜாஜி ஆஸ்பத்திரி, திருச்செந்தூரில் உள்ள பத்மஸ்ரீ டாக்டர் சிவந்தி ஆதித்தன் காலேஜ் ஆப் நர்சிங் உள்பட 416 கல்லூரிகள் உள்ளன. இந்த கல்லூரிகளை தமிழ்நாடு நர்சிங் கவுன்சில் இணையதளத்தில் காணலாம்.

தினத்தந்தி நாள் 17-08-2013